பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

05 09 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தேசிய நல்லாசிரியர் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

2. பிரதமர் நரேந்திர மோடி, புதுதில்லியில் உள்ள ஸ்ரீ ராம் வணிகவியல் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் இன்று கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

3. இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் பல்வேறு தரப்பினருக்கு வாய்ப்புகளை வழங்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. நேபாளத்தில் 275 இந்தியர்களை காணவில்லை என்று வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

5. உலக பாரா வில்வித்தைப் போட்டி குஜராத் மாநிலம், அஹமதாபாதில் நேற்று தொடங்கியது.

>>>>><<<<<

தேசிய நல்லாசிரியர் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நாடுமுழுவதிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, ஆசிரியர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் தங்கள் வழிகாட்டுதல்கள், அறிவுரைகள் மூலம் மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதிலும், அவர்களின் குணநலன்களை வலுப்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்குவது ஆசிரியர்களின் கடமை என்றும், ஆசிரியர்களும் தங்களது அறிவை புதுப்பித்துக் கொண்டு, புதுமையான கற்பித்தல் முறைகளை கையாள வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

இந்நிலையில், மத்திய கல்வி அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடன் தில்லியில் நேற்று கலந்துரையாடினார்.

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் வகையில், மாணவர்களை ஆசிரியர்கள் தயார்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மாணவர்கள், நாட்டின் மிகப் பெரிய சொத்து என்றும் அவர்களை பன்முக ஆளுமை கொண்டவர்களாக உருவாக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமை என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர்கள் திரு. ஜெயந்த் சிங், டாக்டர் சுகந்த மஜூம்தார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

பிரதமர் நரேந்திர மோடி புதுதில்லியில் உள்ள ஸ்ரீ ராம் வணிகவியல் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் இன்று கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

தில்லி பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியான ஸ்ரீ ராம் வணிகக் கல்லூரி, இந்தியாவின் உயர்கல்விக்கான முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

இது வணிகம், பொருளாதாரம் மற்றும் மேலாண்மைத் துறைகளில் புகழ்பெற்ற கல்வி மையமாகும்.

புகழ்பெற்ற கல்வியாளரும் கொடையாளருமான சர் ஸ்ரீ ராம் என்பவரால் 1926 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இக்கல்லூரி, கடந்த நூற்றாண்டில் ஏராளமான அறிஞர்கள், வல்லுநர்கள், ஆட்சியாளர்கள், தொழில்முனைவோர், கொள்கை வகுப்பாளர்களை உருவாக்கியுள்ளது.

>>>>><<<<<

மூன்று நாள் பயணமாக கோவா சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இந்த பயணத்தின் போது, உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் மத்திய-மாநில அரசுகளின் ஒருங்கிணைப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டங்களில் அவர் பங்கேற்கிறார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாநில அரசின் உயர் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

உள்துறை அமைச்சகத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் கோவா தொடர்பான விவகாரங்களை ஆய்வு செய்வதற்கான கூட்டத்திற்கு அவர் தலைமை தாங்குகிறார்.

கோவா பயணத்தின் போது, புதிதாகக் கட்டப்பட்டுள்ள பிஜேபி மாநில அலுவலகக் கட்டடமான 'அடல் பவனை திரு. அமித் ஷா திறந்து வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து, கட்சியின் மாநில மையக் குழு கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார்.

>>>>><<<<<

இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள விவசாயிகள், மீனவர்கள், குறு, சிறு, நடுத்தர தொழில் முனைவோருக்கு பல்வேறு வாய்ப்புகளைத் வழங்கும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் நேற்று நடைபெற்ற இந்தியா-பெல்ஜியம் இடையேயான உயர்நிலைப் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், 200 கோடி மக்களை ஒன்றிணைக்கிறது என்று கூறினார்.

இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால் பங்கையும், உலக வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பங்கையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனின் 27 நாடுகளும் இந்த ஒப்பந்தத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவர விரும்புவதாகவும் அவர் கூறினார்.

ஐரோப்பிய சூழலில் இத்தகைய ஒருமித்த ஆதரவு அரிதானது என்றும் திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

பெல்ஜியம் பிரதமர் திரு. பார்ட் டி வேவர் பேசுகையில், இந்த ஒப்பந்தமானது, வர்த்தகத்தை வலுப்படுத்தி, நிறுவனங்கள் மற்றும் இளம் தொழில்முனைவோருக்கு வாய்ப்புகளை ஏற்படுத்த வழிவகை செய்யும் என்று கூறினார்.

>>>>><<<<<

நேபாளத்தில் 275 இந்தியர்களை காணவில்லை என்று வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 26ஆம் தேதி அந்நாட்டில் நேரிட்ட பெருவெள்ளத்தில் சிக்கிய ஏராளமானோர் மீட்கப்பட்டுள்ளனர்.

சிலர் தாங்களாகவே பாதுகாப்பாக வெளியேறியுள்ளனர். இருப்பினும், இந்தியர்கள் பலர் குறித்த தகவல்கள் இன்னும் கிடைக்காத நிலையில், காணமல் போனவர்கள் குறித்த விவரங்களை வெளியுறவுத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டது.

அதன்படி, 275 இந்தியர்கள் குறித்த தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குறித்து நேபாள அரசுடன் இணைந்து அவர்களை தேடும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது என்றும் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பானர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

நேபாள இயற்கை சீற்றத்திலிருந்து இதுவரை 166 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், சீன எல்லைப் பகுதியில் தங்கியிருந்த ஆயிரத்து தொள்ளாயிரத்து ஏழு பேர் பாதுகாப்பாக நேபாளத்திற்குள் வந்துவிட்டதாகவும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

>>>>><<<<<

யுஜிசி-நெட் தேர்வெழுதும் மாணவர்களுக்கான அனுமதிச் சீட்டை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது.

ஆங்கிலம், வணிகம் மற்றும் சமூகவியல் பாடங்களுக்கான இந்த தேர்வு இம் மாதம் 9 ஆம் தேதியும் 10ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

இந்த தேர்வை எழுதவுள்ள தேர்வர்கள் ugcnet.nta.nic.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அனுமதிச் சீட்டைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஆங்கிலம், வணிகம் மற்றும் சமூகவியல் ஆகிய மூன்று தேர்வுக் தாள்களில் பல பிழைகள் இருப்பதாக வந்த புகார்களைத் தொடர்ந்து, இவற்றுக்கான மறுதேர்வை தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

அதன்படி, ஆங்கிலப் பாடத் தேர்வு செப்டம்பர் 9 அன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் வணிகப் பாடத் தேர்வு அதே நாள் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரையும் நடைபெறவுள்ளது.

சமூகவியல் பாடத் தேர்வு செப்டம்பர் 10 அன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறும்

>>>>><<<<<

இந்தியா - போலந்து இடையேயான இருதரப்பு வர்த்தகம் 10 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டும் என்று போலந்து துணைப் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சருமான திரு. Radoslaw Sikorski தெரிவித்துள்ளார்.

போலந்து சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசிய பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இருநாடுகளுக்கும் இடையேயான பொருளாதார உறவுகளை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து இருவரும் பேசியதாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு இருதரப்பு வர்த்தகம் ஆறு புள்ளி 3 பில்லியன் டாலரை எட்டியதாகவும் இதனை மேலும் அதிகரிக்க இருதரப்பும் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு, விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் இருதரப்பு ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

பாரம்பரிய துறைகளைத் தாண்டி வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியாவும் போலந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. Radoslaw Sikorski தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆப்பிரிக்காவின் புதிய வரைபடத்தை ஐநா பொதுச்சபை அங்கீகரித்துள்ளது.

ஆப்பிரிக்க யூனியனைச் சேர்ந்த உறுப்பினர்களின் ஆதரவுடன் தாக்கல் செய்யப்பட்ட தீர்மானம், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து உட்பட 164 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

அமெரிக்கா மட்டும் இதற்கு எதிராக வாக்களித்ததுடன், ஆறு நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை

வாக்கெடுப்புக்கு முன்பு செய்தியாளர்களிடம் பேசிய டோகோ நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Robert Dussey, நியாயமான உலகமானது நியாயமான வரைபடத்தில் தான் தொடங்குகிறது என்று கூறினார்.

>>>>><<<<<

யுக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல், ஐந்தாவது ஆண்டை நெருங்கி வரும் நிலையில், Kyiv நகரில் உள்ள யுக்ரைன் பாதுகாப்பு தலைமை அலுவலகத்தின் மீது ரஷ்யா நேற்று ட்ரோன் தாக்குதலை நடத்தியது.

இதில், 12 பேர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க தூதரக அலுவலகத்தின் முன்முயற்சியால் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கை அமைதிப் பேச்சுவார்த்தையில் பின்னடைவை ஏற்படுத்தும் என்று யுக்ரைன் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

உலக பாரா வில்வித்தைப் போட்டி குஜராத் மாநிலம், அஹமதாபாதில் நேற்று தொடங்கியது.

வரும் 9ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்தப் போட்டியில், 19 நாடுகளிலிருந்து 105 வீரர் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை, மலேசியாவின் Azian Ayub - Tan Wee Kiong இணையை இன்று எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இப்போட்டி துபாயில் இன்றிரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>END<<<<<